2008 மே 7]

வரவிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதிக்கு நிச்சயமாகப் புதிய பேருந்துகளாக மாற்றித் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 216, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார், மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

216—

கட்டட வசதி

*25735—**திரு. எஸ். ராஜகுமார்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார்.

திரு. எஸ். ராஜகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கின்றேன். இது, 100 ஆண்டுகளுக்கு மேலான மிகப் பழமையான கட்டடமாகும். அதே நேரத்திலே, போக்குவரத்துக்கு இடையூறான இடத்திலே அமைந்திருக்கின்றது. வட்டாட்சியர் அலுவலகத்திற்கு ஒரு சரியான இடத்திலே புதிய கட்டடம் கட்டுவதற்கு வருங்காலத்திலே அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னை நேரிலே சந்தித்து, இந்த அலுவலகம் புதிதாகக் கட்டித் தரப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி வருகிறார்கள். அவர்கள் வலியுறுத்தியதையடுத்து அது குறித்து நான் விசாரித்தபோது, அந்த வட்ட அலுவலகம் கட்டப்பட்டு 132 ஆண்டுகள் ஆவதாகத் தெரிய வருகின்றது. அந்தக் கட்டடம் தமிழகத்திலே மிகப் பழமையான முதல் கட்டடம். வருகிற நிதி ஆண்டிலே நிச்சயமாக அந்தக் கட்டடத்தையும் சேர்த்து, புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார்.

திரு. எஸ். ராஜகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அவையின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். அதே நேரத்திலே, R.D.O. இல்லத்திற்குச் சொந்தக் கட்டடம் இல்லாமல், அவர் வாடகைக் கட்டடத்திலே இருந்து கொண்டிருக்கிறார். அந்தக் கட்டடம் மிகவும் மோசமான இடத்தில் இருக்கின்றது. அதற்கும் புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், கோட்டாட்சியர்கள், அனைவருக்குமே வீடுகள் கட்டுவதற்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. தமிழகம் முழுவதும் முழுமையாக அனைவருக்கும், அவர்கள் குடியிருப்பதற்கு இல்லங்கள் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் மேட்டூர் வட்டாட்சியர் அலுவலகம் வெள்ளைக்காரர்கள் காலத்திலே கட்டப்பட்ட மிகப் பழமையான ஓட்டுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. அந்தக் கட்டடம்

2008 மே 7]

பழுதடைந்து, அவ்வப்போது புதுப்பித்து வரப்படக்கூடிய நிலையில் இருந்து வருகிறது. கடந்த 2006 -ஆம் ஆண்டில் கேள்வி நேரத்தின்போதும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அடுத்த ஆண்டு கட்டாயமாக இது எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவித்தார்கள். 2007 ஆம் ஆண்டும் முடிந்து, 2008 ஆம் ஆண்டு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே, நடப்பாண்டிலாவது மேட்டூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டியதைப்போல, தமிழ்நாட்டிலே மிகவும் பழுதடைந்துள்ள 43 வட்டாட்சியர் அலுவலகங்கள் 100 ஆண்டுகள் கடந்து இருக்கின்றன, 21 அலுவலகங்கள் 90 ஆண்டுகள் கடந்து இருக்கின்றன. இவற்றிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள், கடந்த ஆண்டு மிகவும் பழுதடைந்த 10 அலுவலகங்களுக்குத் தனியாக நிதி ஒதுக்கீடு செய்து, அவற்றின் கட்டுமானப் பணிகள் தற்சமயம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதிலே, பெரும்பாலும் மிக அவசரமாகக் கட்டப்படக்கூடிய பணிகளை அரசு கவனமாக எடுத்துக்கொண்டிருக்கின்றது. குறிப்பாக நீங்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, அங்கே இருக்கக்கூடிய அலுவலகங்கள் அத்தனையையும் அந்த அடிப்படையிலே, ஒவ்வொரு ஆண்டும், நீங்கள் பழுதடைந்து இருக்கிறது என்று சொன்னீர்களே, அந்தப் பழுதுகளை நீக்குவதற்கெல்லாம் பணத்தை ஒதுக்கியிருக்கிறோம். தமிழ்நாட்டிலே எல்லா வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும் தற்காலிகமாகப் பழுது நீக்குவதற்குப் பணம் வழங்கப்பட்டிருக்கிறது. இப்போது அவர் சொன்ன மாதிரி, 132 வருடங்களான அலுவலகத்திற்குக்கூட ஒவ்வொரு ஆண்டும் 5 இலட்சம் ரூபாயை நாம் கொடுத்துக்கொண்டு வருகிறோம். இந்த ஆண்டுகூட நாகை மாவட்டத்திற்கு ரூ.90 இலட்சம் கொடுத்திருக்கிறோம். அது மாதிரி, பழுதுகள் நீக்கப்படுகின்றன. நிரந்தரமாகப் புதிய கட்டடங்களைக் கட்டுவதற்குப் படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 217, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.